








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

We Are Here..!! To Guide You..!!









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 21.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்










## தமிழக நிகழ்வுகள்

- செர்பியாவின் நோவி சாட் என்ற நகரில் நடைபெற்ற **சதுரங்கப் போட்டியில்**, தமிழ்நாட்டின் **கார்த்திகேயன் பாண்டியன்** முதலிடத்தை வென்று, இந்தியாவின் **57-வது கிராண்ட் மாஸ்டராக** உருவெடுத்துள்ளார்.

## இந்திய நிகழ்வுகள்

- இமயமலைப் பகுதியின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு, நிதி ஆயோக்கானது இமயமலைப் பகுதி பிராந்திய ஆணையத்தை உருவாக்கியுள்ளது**(HSRC – Himalayan State Regional Council).** இந்த ஆணையமானது நிதி ஆயோக்கின் உறுப்பினரான டாக்டர் வி.கே. சரஸ்வத் தலைமையில் செயல்பட உள்ளது.
    - மேலும் ஜம்மு காஷ்மீர், உத்திரகாண்ட் மற்றும் இமாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட 12 மாநிலங்களை உள்ளடக்கிய இமயமலைப் பகுதியின் நீடித்த வளர்ச்சிக்கான செயல்பாட்டு ஆணையமாக இந்த ஆணையம் செயல்படும்.

- இந்தியாவில் சமூகப்பணி, கல்வி மற்றும் ஆராய்ச்சி பற்றிய விவகாரங்களை கலந்துரையாடுவதற்காக சமூக அளவில் சகோதரத்துவத்தைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட, **இந்திய சமூகப் பணி மாநாடு-இன் (Indian Social Work Congress)** ஆறாவது பதிப்பு **புது டெல்லியில்** நடைபெற்றது.
    - 2018 –ஆம் ஆண்டு மாநாட்டின் கருத்துரு “மனித மேம்பாடு மற்றும் சமூக உள்ளடக்கம் சமூகப் பணிக்கான கல்வி மற்றும் நடைமுறைக்கு தவிர்க்க இயலாதவை” என்பதாகும்.
    - இந்த மாநாடு முதன்முதலில் 2013-ல் நடத்தப்பட்டது.

- **ஆந்திர பிரதேச மாநிலத்தில், நிலம் தொடர்பான ஆவணங்களை மக்கள் பார்க்கும்** வகையில், ‘**புதார்**’ என்ற இணையதளத்தை அம்மாநில அரசு தொடங்கி உள்ளது. மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள ஆதார் எண்ணைப் போன்று, ஆந்திராவில், நில ஆவணங்களுக்கு “புதார்” என்ற **11 இலக்க அடையாள எண்** அளிக்கப்படுகிறது.
    - இந்த எண்ணைப் பயன்படுத்தி மக்கள், தங்கள் நிலம் மற்றும்

சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களை புதார் என்ற அரசு இணையதளத்தில் பார்க்கும் உறுதியை ஆந்திராவின் புதிய தலைநகர் அமராவதியில் அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

- மகாராஷ்டிராவின் அவுரங்காபாத் மாவட்டத்தில் பைத்தான் தாலூகாவில் உள்ள வாஹிகாவொன் மற்றும் தனகாவொன் கிராமங்களில் **2-வது மெகா உணவுப் பூங்காவை** மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் ஹர் சிம் ரத் கவுர் பாதல் தொடங்கி வைத்துள்ளார்.

## உலக நிகழ்வுகள்

- ஆப்பிரிக்க கண்டத்தின் முதலாவது மற்றும் **மொராக்கோவின் முதல் அதிவேக இரயில் பாதையானது டேன்ஜியரில்,** பிரான்ஸ் அதிபர் **இம்மானுவேல் மேக்ரான்** மற்றும் மொராக்காவின் மன்னர் ஆறாம் **முகம்மது** ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
    - அந்த இரயில்பாதைக்கு “அல் போராக்” எனப் பெயரிடப்பட்டுள்ளது. பிரஞ்ச் மொழியில் **LGV** என அறியப்படும். இந்த இரயில் பாதையானது டேன்ஜியர் மற்றும் கஸா பிளான்கா ஆகிய இரு நகரங்களின் பொருளாதார மையங்களை இணைக்கிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- 2018 ஹாங்காங் ஓபன் பாட்மிண்டன் போட்டியின், பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜப்பான் நாட்டின் நசோமி ஒஹீரா “(**Nozomi okuhara**), ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தென்கொரியா நாட்டின் “சன் வான் ஹோ” (**Son wan – ho**) ஆகியோர் சாம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

## நியமனங்கள்

- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது **அஜய் பூஷன் பாண்டேவை** வருவாய் துறையின் புதிய செயலாளராக நியமித்துள்ளது. இவர் நவம்பர் 30-ம்தேதி முதல் பணி ஓய்வு பெறும்

We Shine Academy™

ஹஸ்முக் அதியாவுக்குப் பதிலாக நியமிக்கப்படுகிறார்.

- தற்போது, அஜய் பூஷன் பாண்டே – **UIDAI ன் CEO** – ஆக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **உலகளாவிய குழந்தைகள் தினம் - நவம்பர் 20**
  - சர்வதேச ஒற்றுமை, சிறுவர் நலன் மேம்பாடு ஆகியவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டு தோறும் நவம்பர் 20 அன்று உலகளாவிய குழந்தைகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இத்தினமானது ஐக்கிய நாடுகள் அவையால் **1954** முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.
  - 2018 உலகளாவிய குழந்தைகள் தின மையக் கருத்து:“குழந்தைகள் உலகை எடுத்துக்கொண்டு அதை நீலமாக்குகிறார்கள்” **(Children are taking over and turning the world blue)**

We Shine Academy™